தாராபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திரு.எஸ்.முஸ்தபா,

ந.க.எண். 58/2026/எப்1 நாள்.06.03.2026

பொருள்: மனைப்பிரிவு அனுமதி – தாராபுரம் நகராட்சி – தாராபுரம் கிராமம் – வார்டு எண்.3, பிளாக் எண்.3, நகரளவு எண்.494 , வார்டு எண்.3, பிளாக் எண்.4, நகரளவு எண்.500,501–ல் 2.385 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திரு.V.ஸ்டாலின் த/பெ விஷ்ணுவசபாண்டியன் திரு.S.மனோஜ்குமார் த/பெ சுகுமாரன் (பவர் ஹோல்டர்). அவர்களின் இணையதள விண்ணப்பம் எண்.SOWO8A99, நாள்.13.08.2025
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம். திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். SOWO8A99/2025/TCP, நாள்.31.12.2025.
3. தாராபுரம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.11506/2025 நாள்.26.12.2024.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் உத்திரவு எண். SOWO8A99/2025/TCP, நாள்.31.12.2025.
5. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ – 4(3) நாள்.04.05.2017.
6. தாராபுரம் நகராட்சி கருவூலம் பற்றுச்சீட்டு எண்.154/CP/25-26/0005179 நாள். 05/03/2026.
7. இந்நகர்மன்ற தீர்மான எண். 2140 நாள்.05.03.2026

*****

உத்தரவு :

தாராபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட, தாராபுரம் கிராமம், வார்டு எண்.3, பிளாக் எண்.3, நகரளவு எண்.494 , வார்டு எண்.3, பிளாக் எண்.4, நகரளவு எண்.500,501–ல் 2.385 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி பார்வை 1–ல் காணும் திரு.V.ஸ்டாலின் த/பெ விஷ்ணுவசபாண்டியன், திரு.S.மனோஜ்குமார் த/பெ சுகுமாரன் (பவர் ஹோல்டர்) அவர்களின் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, உத்தேச மனைப்பிரிவிற்குரிய பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் பார்வை 3–ல் கண்டுள்ள தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக தான ஆவணம் மூலம் தாராபுரம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 4–இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் ஆணையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT Approval No.227/2025 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை 5-இல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி நிலப்பயன்பாடு மாற்றம் செய்வதற்கான உரிய கட்டணமும் மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் பார்வை 6-இல் கண்டுள்ள செலுத்துச்சீட்டின் படி நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
தாராபுரம்
வார்டு எண்.3, பிளாக் எண்.3, நகரளவு எண்.494 , வார்டு எண்.3, பிளாக் எண்.4, நகரளவு எண்.500,501-ல் 2.385 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க, பார்வை 7-இல் கண்டுள்ள இந்நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, பிளாக் எண்.3, நகரளவு எண்.494 , வார்டு எண்.3, பிளாக் எண்.4, நகரளவு எண்.500,501-ல் 2.385 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பூர், அவர்களால் தெரிவித்த நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
தாராபுரம் நகராட்சி

இணைப்பு.
மனைப்பிரிவு வரைபடம்.

பெறுதல்.
திரு.V.ஸ்டாலின் த/பெ விஷ்வசபாண்டியன், திரு.S.மனோஜ்குமார் த/பெ சுகுமாரன் (பவர் ஹோல்டர்)
1/96.வாகரை,பழனி தாலுக், வாகரை,
திண்டுக்கல் -641601.

நகல்.
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.
2. நகராட்சி பொறியாளர், தாராபுரம் நகராட்சி (வரைபட நகல் மற்றும் தான சாசன நகலுடன்) மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலையினை சொத்துப்பதிவேடு மற்றும் சாலைகள் பராமரிப்பு பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. சார்பதிவாளர், தாராபுரம் (வரைபட நகலுடன்) அவர்களுக்கு தகவலுக்காக.